சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள். 08.08.2023

OS.No. 117/2020

PW1: திருமதி. முனவர் ஜஹான்   (வயது 60) க/பெ. காஜாமொய்தீன்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**8 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் சுமாராக படிக்க தெரியும். தமிழை பொருத்த வரை சாதாரணமாக எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் பாக பிரிவினை கேட்டு போட்டுள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண். 84/2A. அதன் பழைய சர்வே எண் . 75/2 என்றால் சரிதான். தாவா பிராதில் என்னை ஆதம் சாகிப் மனைவி மதார் பீபிவின் பேத்தி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் ஆதம் சாகிப் மனைவி மதார் பீபி என்பதற்கோ மதார் பீபிவின் பேத்தி நான் என்பதற்கோ வருவாய் ஆவணங்களையோ, வாரிசு சான்றிதழ்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன் . ஆதம் சாகிப்பின் மனைவி மதார் பிபிவின் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யாததற்கு தனிப்பட்ட காரணம் இல்லை என்றால் மதார் பீபிவின் வாரிசு சான்றிதழை நான் கொடுத்துள்ளேன் . ஆதம் சாகிப்பின் மனைவி மதார் பீபிவிக்கு தாவா சொத்து எப்படி பாத்தியம் என்றால் சகிதா முகமது மனைவி பாத்திமா அவரது மகள் ஆசான் பீபி திருமணம் செய்து கொண்டதால் வந்த சொத்தாகும். அவ்வாறு வந்த சொத்து ஆவணம் என்

கைவசம் இருக்கிறது என்றால் சரிதான் . அந்த ஆவணம் உயில் நம்பர் 9/1919 புக்கு நம்பர் 3 உயிலாகும். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான் . அந்த ஆவணம் என் கைவசம் இல்லை. அந்த ஆவணம் சார்பதிவாளர் ஸ்ரீரங்கத்தில் இருக்கிறது. மேற்படி உயில் ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து வரவழைக்க நான் மேல் நடவடிக்கை எடுக்கிறேனா என்றால் எடுக்கிறேன். அந்த உயிலை பார்த்தால் உண்மை நிலை தெரியவரும் என்றால் சரிதான் . நான் காதர் சாகிப் மனைவி மதார் பிபிவின் சொத்தில் பாகம் கோரவில்லை என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் அப்துல் ரகிம் மனைவி மரியம் பீபிவின் வாரிசு என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான் . நான் அப்துல் ரகிம் மனைவி மரியம் பீபிவின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3 முதல் 7 பிரதிவாதிகள் காதர் சாகிப் மனைவி அமிர் பீபி என்று சொல்லியுள்ளதற்கு வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன் . காதர் சாகிப் மனைவி அமீர் பீபி அம்மாள் அவர்களுடைய வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு தனிப்பட்ட காரணம் இல்லை என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எங்களுடையது என்றால் மூல ஆவணங்களை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு தாக்கல் செய்யாததால் அது எங்களுடையது இல்லை என்றாலும் அது சரியல்ல. இந்த விபரங்களை எல்லாம் வழக்குரையிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் ஆவணம் இருந்தால் சொல்லியிருப்பேன் என்றாலும் அவ்வாறு இல்லாததால் தான் நான் சொல்லவில்லை என்றால் அது சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட மூன்று பேரின் கணவர்கள் பெயர் வா.சா.ஆ.3 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . நான் அதை வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன்.

(வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகிறது).

/signed/
முனவர்ஜஹான்

/signed/
திரு.S.விஜயகுமார், M.A., M.L.,
சார்பு நீதிபதி, இலால்குடி.